## கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகம் - 2014

கொழும்பு பல்கலைக்கழகத்துடன் இணைந்த உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளபடியான நிதிநிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1978 இன் 16 ஆம் இலக்க பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 107(5) ஆம் உப பிரிவு மற்றும் 18 ஆம் பிரிவின் பிரகாரம் விதிக்கப்பட்டுள்ள 2003 இன் 01 ஆம் இலக்க உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் கட்டளைகளின் 17 ஆம் பிரிவு மற்றும் பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்படுதல் வேண்டும் என நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இவ்வறிக்கையில் காட்டப்பட்டுள்ளன. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 108(2) ஆம் உபபிரிவின் பிரகாரம் விபரமான அறிக்கையொன்று 2015 யூன் 09 ஆந் திகதி வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 - 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. பல்கலைக்கழகங்கள் அதிகாரச்சட்டத்தின் 111 ஆம் பிரிவு மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க

நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிவு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டேன் என நான் நம்புகிறேன்.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

நிதிக்கூற்றுக்களானவை உயிரியல் இரசாயன, நுண்ணுயிரியல், உயிரியல் தொழில்நுட்ப நிறுவகத்தின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்கி ஒழுகாமை

பின்வரும் இணங்கி ஒழுகாமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்கி ஒழுகாமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணம் 751, 755 மற்றும் 1979 நவம்பர் 13 ஆந் திகதிய 48 ஆம் இலக்க பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் சுற்றறிக்கையின் 4 ஆம் பந்தி | குறித்த பிரமாணங்களின் பிரகாரம் உத்தியோகத்தரால் இடமாற்றத்தினைப் பெற்றுச் செல்வதற்கு முன்னர் தமது பொறுப்பில் உள்ள பொருட்களை பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்த ரொருவருக்கு கையளிக்கக்கூடிய வகையில் பொருட் பதிவேடு பேணிச் செல்லப்படாமல் இருந்ததுடன், அப்பொருட்கள் உரிய பிரிவுகளின் உத்தியோகத்தர்களின் பொறுப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை<br><br>நிதிப் பிரமாணம் 371 | உத்தியோகத்தரால் பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் அது வழங்கப்பட்ட செயற்பாடு முடிவுற்ற உடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 08 சந்தர்ப்பங்களின் போது ரூபா 3,236,673 கூட்டுத்தொகையான முற்பணங்கள் இரண்டு வாரங்களுக்கு மேற்பட்ட காலமாக தாமதித்து தீர்க்கப்பட்டிருந்தது. அவ்வாறே தேவைப்பாட்டை மிகைத்து ரூபா 53,435 ஆன முற்பணம் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தது. |
| (இ) பல்கலைக்கழக தாபன விதிக்கோவையின் XX ஆம் அத்தியாயத்தின் 3.1 மற்றும் 3.2 பிரிவுகள் | நிறுவகத்தின் கல்விசார் மற்றும் கல்விசாரா அனைத்து உத்தியோகத்தர்களினதும் வருகை மற்றும் வெளியேறல் நேரங்களைப் பதிவுசெய்ய வேண்டிய போதிலும், 04 உத்தியோகத்தர்கள் வருகை மற்றும் வெளியெறல் நேரங்களை பதிவுசெய்யாமல் ரூபா 10,432,909 ஆன சம்பளம் மற்றும் படிகளைப் |

| | | |
|---|---|---|
| | | பெற்றிருந்தனர். |
| (ஈ) | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நிறுவனத்தினால் பேணிச் செல்லப்பட்டிருந்த நிலையான சொத்துக்கள் பதிவேடு சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் பேணப்பட்டிருக்கவில்லை. |
| (உ) | 2006 திசெம்பர் 22 ஆம் திகதிய பீஈ/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3.1 மற்றும் 3.3 ஆம் பந்தி | திறைசேரி அங்கீகாரமொன்று இல்லாமல் சொத்துக்கள் பிரதியீட்டு நிதியம் ஏற்படுத்தப்பட்டிருந்தது. |
| (ஊ) | 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை | வருடாந்த நிதிக்கூற்றுக்களுடன் வரைவு ஆண்டறிக்கையின் பிரதியொன்று கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. |

## 3. நிதிமீளாய்வு

### 3.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் படி, 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதி விளைவுகள் ரூபா 9,687,231 மிகையாக இருந்ததுடன், அதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 7,823,423 ஆக இருந்தது. முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் ரூபா 1,863,808 ஆல் அதிகரித்தமைக்காக அரசாங்க மானியம் ரூபா 9,738,000 ஆல் அதிகரித்தமை மற்றும் உழைத்த வருமானம் ரூபா 1,950,447 ஆல் அதிகரித்தமை என்பன தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டுமீளாய்வு

### 4.1 பதவியணியினர் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு கல்வி மற்றும் கல்விசாரா பதவியணியில் வெற்றிடங்கள் 05 ஆக இருந்தன.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 கூட்டிணைந்த திட்டமும் செயல்நடவடிக்கைத் திட்டமும்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் பிரகாரம் நிறுவனமொன்றினால் தமது கூட்டிணைந்த திட்டம் மற்றும் வருடாந்த பாதீடு குறித்த ஆண்டு ஆரம்பமாவதற்கு 15 நாட்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அவ்வறிக்கை 2014 மே 10 ஆந் திகதியே கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும் நிறுவகத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 2014 – 2018 இற்கான கூட்டிணைந்த திட்டத்திலும் மீளாய்வாண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்திலும் உள்ளடக்கப்பட்ட Establishment and maintenance of mitochondrial DNA database செயற்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 5.2 கொள்வனவுத் திட்டம்

2006 ஆம் ஆண்டின் கொள்வனவு வழிகாட்டிக்கோவையின் 4.2.1 பிரிவின் பிரகாரம் பிரதான கொள்வனவுத் திட்டம் குறைந்தது 06 மாதங்களுக்கு ஒரு முறை நாளதுவரையாக்கப்பட்ட

வேண்டிய போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களில் ரூபா 2,359,590 ஆன கொள்வனவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வில் அவதானிக்கப்பட்ட முறைமைகளினதும் கட்டுப்பாடுகளினதும் குறைபாடுகள் அவ்வப்போது நிறுவகத்தின் பணிப்பாளரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டிருந்தன. பின்வரும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகிறது.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) கொள்வனவு வழிமுறை
(இ) இருப்புக் கட்டுப்பாடு
(ஈ) முற்பணம்